# ஆதி மார்க்க னீதி மொழி

May 2023

இதழ் 22 – மே மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



### மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, இரண்டாம் வருடத்தில், 22வது இதழாக, 13 அவை மற்றும் 2 இசை வகுப்பு நிகழ்வுகளையும் கொண்டு மலர்ந்துள்ள ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்ஞிகையின் நோக்கம், மக்களுக்கு ஒரு உண்மையானது போய்ச் சேர வேண்டும் என்பதே. எப்போதும் உள்ள நித்திய உண்மையை அறிய முடியாது தடுக்கும் மாயையில் சிக்கியுள்ள ஒருவனை அதிலிருந்து மீட்பதே மெய்ஞ்ஞான மகத்துக்களின் நோக்கம். 1,24,000 நபிமார்கள், முப்பத்து முக்கோடி தேவர் ரிஷிமார்கள், 27 தீர்த்தங்கரர்கள், 12 ஆழ்வார்கள், 63 நாயன்மார்கள், அருளாளர்கள், சித்தர் முத்தர்கள், யாவரும் இவ்வுலகிற்கு வந்தது மனிதன் அறியாமையில் சிக்கி மாண்டு போகாமல் இருக்கவே.

அறிவை பெற்று மனிதன் மாயுமுன்னே மாய்ந்து கலை பாயக்கூடிய ரகசியத்தை அறிந்தவனாக ஆக வேண்டும் என்பதே இந்த சஞ்ஞிகையில் பொதிந்துள்ள கருத்துக்கள். அறிவுத் தெளிவை நோக்கிய பயண வாழ்க்கையே ஒருவனுக்கு தெளிவாகவும், அஃதிலையேல் குழப்பம், கவலை தரும் இருள் உலக வாழ்வாகவும் இருக்கும். ஐயறிவு ஜீவ பேதங்கள் இருளில் இருந்தே வாழப் பழகியவை. ஆனால் வெளிச்சத்தில் இருந்து வாழப் பழகிய மனிதன் ஒருவனுக்கே இருளை விட்டு விலகி வாழக்கூடிய சக்தி உண்டு. இதுவே ஜீவனின் ரகசியமாக மனிதனை பிரகாசிக்கச் செய்கின்ற மெய்யான நான் எனும் ஒளியாக இருக்கிறது.

உங்கள் முன் திகழும் இந்த சஞ்ஞிகையின் நோக்கம் அறிவெனும் தேவாதி தேவனாகிய ஒளி தேகத்தை பெற்று எல்லோரும் அவ்வொளியில் ஒடுங்க வேண்டும் என்பதே. மரணமிலாப் பெருவாழ்விற்கான ரகசியங்களையும் வழிகளையும் அறிந்து, தன்னுள் தானே பயணித்து, **தன்னிற் றானே தலைவனை யறிந்து, மன்னூழி யூழி காலமும் வாழ்வார்** என்ற பரம்பொருள் பிரம்மபிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தின் படி இந்த அரும்பெரும் செயலானது எக்காலத்திலும் இருந்து விளங்கிக் கொண்டே இருக்கிறது.

**ஜட சூரியனே ஒன்று என்றால், ஞான சூரியன் மட்டும் இரண்டா இருக்கும்?** என்ற சாலை ஆண்டவர்களின் கேள்வியே, உலக மக்களிடையே *சாலை ஆண்டவர்கள்* ஒருவரே ஞான சூரியன், என்ற எண்ணத்திற்கான காரணமாக உள்ளது.இதற்கான பதிலை சாலை ஆண்டவர்கள், ஐவணத் தளிர் என்ற பாடலில் **தொண்டர்கள் பூவில் ஞான சூரியன் உதயம் கண்டேன்** என அருளியுள்ளார்கள். தன்னை நாடி வரும் சீடர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து, பொய் திவலையும் கலவாத மெய்மை உலகில் அவனை ஏற்றி வாழ வைத்து, அவன் மூலமாக மெய்ஞான சந்ததிகள் உண்டாக, நாதம் விளைந்தவனாக அவனை ஆக்கியும், ஆக்கிக் கொண்டும், ஆக்கவும் செய்த, செய்கின்ற,



Copyright © AMNA Trust, Chennai

வந்த வந்த பாரவான்களே நாதம் விளைந்த நாதன் எனும் ஞான சூரியன். அவரின் நாதத்தின் மூலமாக விளைந்த மெய்ஞான சீடர்களின் திருக்குழாம், இவ்வுலகில் வாழையடி வாழையாக, என்றென்றும் மாறாத நித்தியமாக உள்ளது. இதனை எதார்த்த உள்ளமுடன் தேடுகின்ற மக்களுக்கு சொல்வதற்கென நிச்சயமாக ஒருவர் இருப்பார் என்பதையே சாலை ஆண்டவர்கள் பூரண புதையல் என்ற பாடலில் **போதகமின் னூலின் பூட்டை - யறிவதற்குப் பூதலத்திற் கோடியிலொ ருவனிருப்பான்** எனவும் **மெய்ன் னிலைகண் டாசானெங் ஙெங்ஙு முண்டு** என மெய்வழி னூலிலும் ஆசீர் பாதமாக அருளியுள்ளார்கள்.

மனிதர்களை மகான்களாக்குகின்ற அருந்தவ மந்திரங்களுடனும், தேடுகின்ற மக்களுக்கு பொருள் இன்னது தான் என்கின்ற பொக்கிஷங்களுடனும் உதயமாகி வரும் இந்த மின்னணு சஞ்ஞிகையை எதார்த்த உள்ளம் கொண்ட மக்கள் கண்டடைந்து எமபயம் கடந்த வாழ்வை கைக்கொள்ள வேண்டும் என்பதே இந்த அவையின் நோக்கமும் நிகழ்வுகளும்.

மக்கள் இதனை பார்த்து பயனடைய வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடிகளை போற்றி வணங்குகிறேன். எக்காலத்திலும் இவ்வுண்மையானது ஓங்கி உரத்த குரலில் முழங்கிக் கொண்டே இருக்க வேண்டும் எனும் எம்முடைய அவாவானது எம்மக்கள் மூலம் நிறைவேறிக் கொண்டு இருப்பதற்கான சாட்சியே இந்த சஞ்ஞிகை. இது மேலும் மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

சாலை ரவி

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*ஐந்து அறிவுக்கும் தனித்தனியே கருவிக் குலங்ஙள் இருக்கின்றனவே, அதுபோல் ஆறாவது அறிவுக்குக் கருவிக் குலம் எங்ஙே? ஐந்து அறிவுக்கும் கருவிக் குலங்ஙள் இருக்க, ஆறாவது அறிவுக்கு மட்டும் கருவிக் குலம் இல்லாமலா போகும்? அது எங்ஙே? இந்நக் கேள்விக்கு உலகமே திரண்டாலும் பதில் சொல்ல வருமா? ஆறாவது அறிவின் கருவிக் குலம் இதோ என்று தொட்டுக்காட்டப் பெறுகின்ற எல்லையே இது. ஒருவர், தம் கருணை வீட்சண்யம் கொண்டு உன் னெஞ்ஞை இரு கூறாகப் பிளந்நு, அதை - அந்ந ஜீவ முதலை - உனக்குக் காண்பிக்கின்றார்கள். "இது யாரால் முடியும்? யாருக்கு எட்டப் பெற்றது?" என்று படித்தவர்களும் படிக்காதவர்களும் ஒரே முகமாக னின்று பேசுவார்களே அதுவானதாக இருக்கும். இப்படி எல்லோருக்கும் தேவையானதும், எல்லோரும் கண்டு அதிசயப்பதும், எல்லோருக்கும் ஆச்சரியமானதும், சர்வலோக சஞ்ஞீவியானதும் ஆகிய ஒன்று இங்ஙே முளைகண்டுள்ளது.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 ஏப்ரல் மாத அவை நிகழ்வுகள் – 2023 மே மாத வெளியீடு

**01-04-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**தாகந் நீர்த்த தனிப்பெருங் கடலே...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

குருபிரானின் அருளமுதமாகிய தனிப்பெருங்கடலே, மோகத்தால் பிறவிச்சுழலில் சுழன்று அருங்களைப்புடன் வருபவர்களின் தாகம் தீர்த்து மனவேகத்தை மதிவேகமாக மாற்றுகிறது. **வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க** என சிவபுராணத்தில் அருளியபடி, மாறாக ஓடுகின்ற மனமெனும் குதிரையை லயப்படுத்தி வாசி எனும் குதிரையாக மாற்றி வைக்கும் னாகவல்லி னாயகரின் னாதமே னமக்கு காப்பாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் வாக்கியம் எண் 124 :** பிருக்த யோகம் - தேக முத்தி: வாடாத அழியாத யவ்வன தேகத்தின் பொலிவை அழி தேகத்தின் மேல் பாய்ச்சி, அழியாத் தூலம் ஆக்கும் செயலாகும். வல்லபமுடைய ஆசானின் னாதவுடலாகிய யவ்வன தேகத்திலிருந்து பிறங்கும் வாய்மையே அழிவுடலாகிய மனதை அழியா சூக்கும உடலாக மாற்றி தேக முத்தி அளிக்கிறது.

*ஜீவசகோதரி லாவண்யா:* **பேசாத பெரிதின் பேச்சறிவித்து... (ஞான அகவல்)** ஒவ்வொரு மனுத் தலையிலும் பேசரும் பெரும் பொருளானது, பாதமாக, சிவமயப் பொருளாக, இறைபொருளாக, எழுதாத எழுத்தாக, கூறாத அட்சரமாக பொதியப் பெற்றுள்ளது என்பதை ஆண்டவர்கள் முரீது சுருக்கத்தில் **பராபரமான னிராதாரமாகிய ஆறாதாரத்தினுள்ளே அந்த ஆறடிக் குச்சுக்குள் கூறாத அட்சரம் தேர்வதுன் கல்புக்குள்ளே...** என அருளியுள்ளார்கள். காமீலின் கருணையால் ஓயா தவத்தின் னுண்மதி அறிந்து, சாமுனம் சாகப் பழகுவதன் மூலமே தலையான பொருளை தன்னுள் உணர முடியும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம்**
**லூகா 17:21** *இதோ இங்கே என்றும் அதோ அங்நே என்றும் சொல்லப்படுகிறது இது ஏதும் இராது. இதோ தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறது என்றார்.* னினைவென்னும் ஆகாய வெளியில் தான் சர்வ சம்பத்தும் இருக்கிறது என்ற தெய்வத் திருவாக்கின் படி, கடத்துள்ளிருக்கும் தேவனை வெளியில் தேடினால் கிட்டாது என்பதையே இத்திருவசனம் உணர்த்துகிறது.

**ஜான் 2:14** *உலகம் சத்திய ஆவியானவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால், அவரை பெற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்.* அரூப வடிவமாகிய இறைவனை சிலாரூபத்தில் வணங்குவோர் அறிவது இல்லை. தன்னையறிந்த மெய் மகத்துக்களின் இரக்கத்தால் மூன்றாவது கண் திறக்கப் பெற்றவர்களே அகமுகமாக இறைவனை தரிசிக்க முடியும்.

**ஜான் 2:19** *இயேசு அவர்களுக்கு பிரதியுத்திரமாக இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள். மூன்று நாளைக்குள் எழுப்புவேன்* என்றார். 46 வருடம் கட்டிய இவ்வாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள் இதை நீர் எழுப்புவீரோ என்றனர் யூதர்கள். **மாண்ட மனுவனைத்தும் மண்ணிலிருந் தெழுப்பித் தோன்றும் தீர்ப்பினிலேற்றிச் சொர்க்க னரக மென்றும்** என ஆண்டவர்கள் அருளியுள்ள படி, தேகமே **னான்** எனும் அறியாமையை இடித்து தவிடு பொடியாக்கி மீண்டும் மறுபிறப்பு தந்து ஆன்மா லயமாகும் இடமாகிய ஆலயத்தை சீராக எழுப்புவேன் என்பதனையே இயேசு கூறினார்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம் : அமுதகலைக் ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**
**ஆடலங்னன்னி :** சுக்கில னாத உடம்பாகிய ஆசானின் அமுத தாரையே அடி முடி னடுவான முப்பொருளை அறியச் செய்யும். இல்லறம், கிரகஸ்தன், சன்யாசி, பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், துறவறம், அறம், சமத்துவம் என்ற எட்டு படி னிலைகளின் மூலம் அடையக்கூடிய அமானிதப் பொருளின் இரகசியத்தையும், அறு கூறின் சுவை மரமாகிய வேர் மேலும் தலை கீழுமாய் னிற்கும் தெய்வீக விளக்கங்களை உள்ளடக்கிய பத்து பாடலின் சிறப்பையும், கற்றவரும் கல்லாதவரும் களிப்புறும் வண்ணம் அருளவே அருட்குரு ஆடலம் புரிகின்றார்கள்.

**வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு புடைசூழ்ந்து வயங்ஙா னிற்ப... (ஆடலங்னன்னி)** னற்றாளாகிய திருச்சிற்றம்பலப் பொருளை கைகொண்டு சித்தரிக் குரத்தியாக, வெற்றிக் கல்வியை கற்பிக்கும் கற்பகத்தருவாக, சீரிய மதங்களை செழித்துச் சம்மதிக்க கூட்டி வைக்க வீரிய வாள் கை ஏந்திய விராட் குருவாக, அறியாமையை பேர்த்து அறிவுப் பிரகாசமளிக்கும் குபேரராக, சர்வ மதத்தையும், மந்திரப் பலனையும் தன் திடத்துள் அடக்கிய மாபலம் உடையவராகிய மகதி ஆண்டவர்களின் அதிவல்லப அருங்னாரணச் செயலை அகந்துலங்க அருளிச் செய்து ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**02-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. ஜெய்குமார்**

**பெருவறம் தாங்னித் துறவறம் பாய்ந்து...** என்ற முரீதுச் சுருக்கம் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* இறைவன் மனிதனுக்கு அருளிய தனிச் சீதனம் வாக்கு வல்லமையும் செவிச்செல்வமும் ஆகும். ஆதிமுதல் தேவனிடமிருந்து வெளிப்படும் சத்திய வாக்கானது, மனிதனின் காலவிரயத்தை தடுக்கும் ஜீவனுக்கான செல்வாக்காகி சர்வ பாவங்களையும் போக்கி சகல ஐஸ்வரியமும் வழங்குகிறது. காய மன வாக்கிற்கு எட்டப்படாத பிரம்ம னிஷ்டை கைவரவாக திருநீறாகிய ஆசானின் ஆலவாயே துணை.

*ஜீவசகோதரி ஷண்முகப்ரியா:* சிவபெருமானின் மகனாக விளங்கும் யானை முக ஐங்கர வினாயகப் பெருமானை புந்தி என்கின்ற மனதில் வைத்து அடியாகிய பாதத்தை துதிப்பதாக உலக மக்கள் சிலை மற்றும் படங்களை னகல் என அறியாமல் வணங்குகின்றனர். இதன் உண்மை நிலை, ஐங்கரம் = ஐந்து தொழிலையும், யானை முகம் = ஆன முகத்தையும், இளம்பிறை = அறிவின் வடிவையும், நந்தி = நன்மை தரும் தீயையும், புத்தி = உள்ளங் கையாகிய வைகுண்டம் என்பதை எடுத்து அருளும் குருபெருமானே விநாயகப் பெருமான் ஆவார்.

**குருபெருமான் அருளமுதம்:** ஆசானின் வாக்கே சிவ சன்னிதியில் நம்மை சேர்க்க வல்லது. நினைவு பிறக்கும் தலம் பிறப்பிடமாகவும், நினைவு அற்ற தலம் இறப்பிடமாகவும், நினைவுக்குள் நினைவாக இருக்குமிடம் இனி சாகாதிருக்கும் இடமாகவும் உள்ளது. எண்ணத்தின் மூலமாக வாழும் நம் வஞ்சப் புலன்களே நமக்கு எமனாக உள்ளது. மனிதனிடத்தில் அறிவாக, அருளாக, ஒளியாக விளங்குவதே காரண தேகம்.

*ஜீவசகோதரி மஹிமா:* தன்னையறியும் தவமுறை ரகசியம் அறிய நெருப்பாறு மயிர்ப்பாலம் கடக்க வேண்டும். காரண தேகத்தின் ரகசியத்தை அறிவதே தன்னை அறிதல், நடமெனும் னடனமாடும் நடராஜ தத்துவமே, திருக்கூத்தாகவும், அதன் ஓசை அறிவெனும் காதிலும் பொதிந்துள்ளது. னினைவு பிறக்கும் தலமே அறிவாகிய தலம். நம் வஞ்சப் புலனை வெல்லவும், தன்னை அறியும் தந்திரத்தை அருளவும் வல்லது ஆசானின் திருவாக்கே.

*ஜீவசகோதரி ஶ்ரீமா:* அரூப வடிவத்தில் வீற்றிருக்கும் இறைவனை புறத்தில் தேடுவதே மததுவேஷ காரணம். **அல்லா ஒருவரே, அவர் பெறவும் இல்லை பெறப்படவும் இல்லை அவனுக்கு ஒப்பாக ஒன்றுமில்லை** என்கிறது திருக்குர்ஆன். காற்றால் உண்டாகும் ஓசையால்



Copyright © AMNA Trust, Chennai

பிறக்கும் உலகம், ஃ எனும் பிரம்மமாக உள்ளது. ஆசானின் னாதமே கோ எனும் இறைவனை தன்னுள் தரிசிக்க நுழைவு வாசலாக உள்ளது. ஆறு ஆதாரத்தின் நிலைகளே பூரகம், ரேசகம், கும்பகம். குரு சொன்ன ஆசனத்தில் அமர்வதே இறைவனை காண்பதற்கான வழி. மெய் உணர்வு மேம்பட எண்ண வேற்றுமைகள் மறையும். உடல், உயிர், ஆன்மா மூன்றும் ஆவி எனும் ஓர் அட்சரமாக உள்ளது. இதனை தாங்கி நிற்கும் மனித வடிவே சிவலிங்கமாக, சிதம்பரமாக, சதாசிவமாக உள்ளது என பெரியோர்கள் அருளியுள்ளார்கள், என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**02-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**அரண்டிடும டத்தாருப தேசமத ழிம்பெனக்கண்**
**டக்கினியி லிட்டெடுத்தபின்...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மெய் ஆசான் அவர்களின் அறிவுடன் கலக்கும் போது நமது அறியாமை அறிவாக மாறுகிறது. ஏகாட்சரமாக அனுபவப் பொருளாக உள்ள உகாரப் பொருளை அறிவதே அறிவு. அதனை அறியவைத்து, ஜென்மந்தோறும் செய்த கன்மங்களை தீர்த்து ஜலால், ஜமால் எனும் இருகடலையும் ஒன்றாக்கி, சாலை னிலத்தில் குடியேற்றி வைப்பவர்களே மெய்ஆசான்.

**அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவு அறியாமை யாரும் அறியார்**
**அறிவு அறியாமை கடந்தறி வானால்**
**அறிவு அறியாமை யழகிய வாறே** என்கிறது திருமந்திரம்.

கீழ் நோக்கமாக நம்மை தள்ளும் மனம் ஒரு மெய்ஆசானிடம் சரண் அடைந்தால், அதுவே அருட்கடலாகி, பிரகாசப் பொருளாகி, எண்ணாயிரம் கோடி காலம் இருந்தாலும் சலிக்காத இன்பனாடான தூங்காமல் தூங்கி சுகம் பெறும் னிலையை அடைகிறது.

ஆன்மா லயமாகும் இடமே ஆலயம். அதுவே சரணகமலாலயம். அதில் புகுந்தால் அழிவில்லை என்பதை, சாலை ஆண்டவர்கள் **ஆலயம் புகுதல் அழிவிலா வாழ்வு தன்பெரு ஆலயம் தனித்த னற்றவம்** என அறிவுஅறி பாடத்தில் அருளியுள்ளார்கள். மனம் மாசில்லா மணியாக, பிரம்மமாக, அறிவாக, ஜீவனாக, சுத்த திருவடியாக மாறும் செயலையே கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு உபதேசித்தது. அறிவெனும் சைதன்யமாகிய, ஜீவனின் சுத்த திருவடியில் இரண்டற கலந்து சுத்த சைதன்யரான ஆசான் தங்களின் சொல் ஒரு பொருளால் நம் அறியாமை அகற்றி, எமனச்சம் தெளிவித்து, கயிலை வீடடைய அருள்கிறார்கள்.

காலகாலமாக அவரவரின் உள்ளிருந்து இது இது, இன்னது என அறிவிக்கும் பொருளாகிய இறைவனை அறிய வைத்து, சாவா வரம் தரும் சஞ்ஞீவி மூலிகையாக இருப்பது ஆசானின் னாதமே. இதனை சாலை ஆண்டவர்கள் **வான வேதாந்நச் சஞ்ஞீவி - குரு வள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்ஞீவி** என ஆனந்த களிப்பில் அருளியுள்ளார்கள். கலி மரமாக இருந்த நம்மை கலிமா மரமாக்கி சஞ்ஞீவி மூலிகை கொண்டு சிரஞ்ஞீவியாக மாற்றுகிறார்கள்.

**வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால் பெருந்துயரிடும்பையில் பிறந்து**
**... நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்**
**(நாலாயிர திவ்யபிரபந்தம்)**

*புவியில் தாபத்ரய மென்னும் அக்னியால் தகிக்கப்பட்ட சாந்நமின்றிய பிராணிகளுக்குக் குருவே மேலான கங்கையாவர். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

நாம் இத்தேகமல்ல என்பதை அறிந்து, இதனை இயக்கும் பற்றற்ற காரணப் பொருளை நாம் பற்றினால் பொய்யான பற்றுகளை விட்டு விலகி வீடுபேறு அடையலாம். இதனை செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்தலுடன் அவை இனிதே னிறைவுற்றது.

**06-04-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**தரைதனில் நரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை...** என்ற தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:**
ஒருவனை நரன், மனு, தேவன் என அறிய வைப்பது அவரவரின் நானிலம் என்ற வாக்கே. இந்த உடல்தான் நாம் எனும் அறியாமை விலகி மெய்குருவின் இரக்கத்தால் ஆறாவது அறிவை அறியும் செயலையே, ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்பதும், மாண்ட மனுவனைத்தும் மண்ணிலிருந்து எழுப்பி என்பதும், மாண்டவர் எழுவார் என்பதும், உயிர்த்தெழுதல் என்பதை குறிப்பதாகும்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 107 :** மனிதன் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு நிலைகளை உணர்த்தவே மதங்களும் மதகுருமார்களும் வந்தனர் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வள்ளல் பெருமான் அருளிய ஏமசித்தி, சாகா கல்வி, தத்துவ நிக்கிரகம் செய்தல், கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்ற நான்கு புருஷார்த்தங்களே மேற்கூறிய நான்கும்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **பாயும் சுவாசம் பகருமீ ராறும் ... (ஞான அகவல்)** வீணாகும் சுவாசம் ஒடுங்குமிடம், அசதிக்கு மாறிடம், நோன்பு இருக்குமிடம், உறக்கம், உயிர்ப்பு இவற்றின் உலவிடம், அறுசுவை ஒளிக்குமிடம், ஒன்பது வாசல் உள்தாளிட்டு ஐம்புலக் கதவை அடைக்கும் உபாயம் மற்றும் துசுமனாகிய எமனணுகா இடத்தையும் காட்டி நம்மை வாழ்வாங்கு வாழ்வு வாழ வைப்பவர்களே சற்குருபிரான்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* முப்பால் அதிகாரங்களால் ஆன திருக்கொரலில் வரும் அதிகாரம் எனும் அர்த்தமாகிய சட்டத்தை, மீறினால் வரும் தண்டனை போல் பெரியோர்களின் வாய்மை என்ற அதிகாரத்தை மீறினால் எமனாக்கினை என்ற தண்டனை வருகிறது. கடவுள் வாழ்த்து என்பது கடவுள் நிலை பெற்ற பெரியோர்களின் திருவாய் வாய்மையில் ஆழ்வதேயாகும். திருவடி ஞானத்தை அருளும் ஆசானின் பொற்பாதம் போற்றிப் பணிகிறேன். கடவுள் வாழ்த்தாக வரும் 10 கொரல்களும் உணர்த்துவது,

1. அகரமாக, ஆதியாக, பகவனாக, எழுதாத எழுத்தாக தன்னுலகமாக அவரவரிடத்தில் இருப்பதே திருவடியாகிய இறைவன்.
2. கல்வியின் சிறப்பு நற்றாளை அறிந்து தொழுவது.
3. மலர்மிசை என்ற பூம்பாதத்தின் மூலம் மாணடி என்ற திருவடியை சேர்ந்தவர்களே நீடுவாழ்வர்.
4. வேண்டியோர், வேண்டாதோர், யாவரையும் ரட்சிக்கும் இலானடி என்ற திருவடி சேர்ந்தவருக்கு இடும்பை எனும் எமனச்சம் இல்லை.
5. நல்வினை தீவினை இரண்டும் சேராது இறைவனின் பொருளாகிய திருவடியை சேர்ந்து வாழ வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai 

6. பொறியாகிய அறிவில் புலனைந்தும் அவித்தவர் ஆசானின் ஒழுக்க னெறியாகிய திருவடியில் நின்று நீடுவாழ்வர்.
7. அவரவரின் உவமை இல்லா திருவடியை ஆசான் அருளால் சேந்தவருக்கு மனக்கவலை இல்லை.
8. அற வழியில் வாழும் அந்தணராகிய ஆசானின் திருவடியில் சேர்ந்தவர்க்கு பிறவாழி நீத்தல் எளிது.
9. எண் குணத்தானாகிய ஆசானை வணங்காதோர் அறிவற்ற நவகிரக கோள்களின் பிடியில் சிக்குவர்.
10. பிறவிப் பெருங்கடலை நீந்த இறைவனாக வரும் மெய்க்குருவின் திருவடி சேர வேண்டும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **(அழகு அணி சித்தர், பாடல் எண்-10) பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்...** பையூர் என நாற்ற கருவறையையும், பாழூர் என அழிவுடலையும் கூறுகிறார். வேதத்தில் உள்ள அசத்தை னீக்கிச் சத்தை மாத்திரம் தருகின்ற ஜீவன் முத்தர்களின் வாக்கே வேதாந்நமாகும். ஒரு ஜீவன்முத்தரின் கையகத்தில் ஆனவர்களே பையூர், பாழூர் என்ற பிறப்பிலிருந்து மாறி மெய்யூராகிய பிறவாநிலை பெறுவர்.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்**

**சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்**

**- ஔவையார்.**

மெய்க் கல்வி பழகித் தேர்ந்தவர்களே அறிவுடையோர் என வேதம் கூறுகிறது. போத னா சக்தி தலைவராக வரும் சற்குருவான ஆலவாயான் பூசும் மங்கா திருனீற்றை அணிந்தவரே வினை தீர்ந்து சிவகதி சார்வர். மந்திரப் பலனனைத்தும் தரும் ஆண்ட குருவே மேரு பாதமாக விளங்குகிறார்கள் என அருளி தோத்திரப் பாடலுடன் அவையை னிறைவு செய்தார்கள்.

## 08-04-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்...** எனும் குருமணிமாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :** செல்வச்சீர் எனும் அடி முடி னடுவான னாயக னபியெனும் ஜீவனை அந்நர் மா முகமாக ஆதி மார்க்க னீதி அவை மக்கள் தரிசனை காண்கின்றனர். **ஏசுனன் னாத ரெங்னள் இருதயக் கனியாம் கன்னி...** இயேசு ரத்தம் சிந்திய புனித வெள்ளி, மற்றும் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்பதன் நிஜ அர்த்தம் தெரியாதவன் பரலோக சாம்ராஜ்யத்தில் நுழைய மாட்டான்.

**உயிர்த்தெழுதல் :** மறுபிறப்பின் ரகசியமே உயிர்த்தெழுதல். மறுபிறப்பிற்கான ஆறாவது அறிவை அறியாதவன் பாவியாகிய நரனாகவும், அறிந்தவன் புண்ணிய மனுவாகவும் ஆகிறான்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 125:** தொனியை அதிகமாக மெய்ச்செயலில் செலவு செய்கிறவனே ஜீவன்முக்தனாகிறான். ஜீவனின் போக்குவரத்தாகிய ஓங்நாரத் தொனியான கபாலத்தின் சிறு வழியறிந்து, ஓங்காரம் எனும் உணர்வை உணர்வுகார ரகிதமாக மாற்றும் செயல் அறிந்தவர்களே ஜீவன்முக்தன்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **மவுத்தாம் தகுத்தின் வகையறி வித்து... (ஞான அகவல்) செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாகா திருந்திடமும் அத்தனையும் அறியாதா ரறியுமறி வெவ்வறிவோ... (திருஞானத் தாழிசை)** செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகாதிருக்கும் இடத்தையும் அவரவருள் அறியவைத்து மெய்வழி எனும் மேட்டில் குடியேற்றி வைத்து அருள்பவர்களே மெய்க் குருபிரான்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபெருமான் அருளமுதம்:** உயிர்த்தெழுதலின் ரகசியமும், சாவரும் முன் சாகப் பழகும் சன்மார்க்க செயலின் ரகசியமுமே மவுத்தாம் தகுத்து. சர்வமும் போய் ஒடுங்குமிடம் **ம்** என்ற ஊமை மூலம். பிரணவப் பொருளான அகரமுதல் வந்து அமர்ந்த பின் சப்தம் வரும் செயலையே ஆண்டவர்கள் நான் வந்து அமர்ந்த பிறகுதான் பார்க்கிறாய், கேட்கிறாய், பேசுகிறாய் என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்திய வேதம்:**
**கொரிந்தியர்-1:2:13** பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். நரனின் அசுத்த ஆவியான தீட்டு வார்த்தைகள் நம் அழிவுக்கும், கர்த்தராகிய குருபிரானின் பரிசுத்த ஆவியான வாய்மை நம் ஜீவரட்சிப்புக்கு உரியதாகவும் உள்ளது.

**மத்தேயு-7 : 8** கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். கேட்கிறவன் மெய்யறிவைப் பெறுகிறான். தேடுகிறவன் நித்திய ஜீவனைக் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்கு மனம் திரும்பி அறிவாக மாறி பரலோக ராஜ்ஜியம் திறக்கப்பெறுகிறது.

**குருபெருமான் அருளமுதம்:**
**அமுதகலைக் ஞான போதம் - இரண்டாம் காண்டம்:** ஓசை கொண்ட நடனத்தால் மனு ஈசனாகும் செயலை னடனக் கலிவிருத்தத்தில் **கலாஅ, சிலாஅ, நிலாஅ, குலாஅ** என உயிரான **அ** சேர்த்து அருளியுள்ளார்கள். பரமார்த்த சொரூபரான குருபிரான் ஆலவாய் திறந்து அருளும் சொல், மொழி, பொருள், வளம் மிகுந்த ஆடலங்ஙன்னியாம் அருளமுதமே நாத்திகமெனும் அறியாமை இருளை அகற்றுகிறது. மலரின் வாசனை தேடி வரும் வண்டு போல் மெய்ம்மணம் தேடிவரும் நன்மன மக்களுக்கு குருபெருமான் திருச்சிற்றம்பலப் பொருளை அருள்கிறார்கள். னீதியை அறிந்நறைந்த ஞானிகளின் கொரல் பாக்களுக்கு, அறிவறிந்து அகந் துலங்க அந்தர் மா முகங்ஙண்டோங்கும் செயல் அறிந்தவர்களே உரை செய்யத் தகுதி பெற்றவர்கள்.

ஆசானின் சொல்லானது ஒருவனின் குன்று மல வெம்மாயை கடந்து, கு எனும் இருள் மாற்றி குமாரனின் இருப்பிடமான ஜீவகுகையில் குடியேற்றி சீவனாரை சிவனார் ஆக்குகிறது. **சுடாஅ மணியி னேரகித கோடாஅ...** என்ற பாடல் உயிர் எழுத்துக்களின் ரகசியம் வைத்து எழுதப் பெற்றுள்ளது. **அரி அகர முதலாய அவ்வுந் நேறி...** நடுவான ஜீவனின் ரகசியம் வைத்து பெரியோர்கள் அருளிய அறிவாகார வைரம் போன்ற நூலினை கரும்பின் சக்கைக்கு இணை வைத்த பொருளறியா மூடன் இருள்வழி போய் மாண்டு நரகம் புகுகிறான்.

அகர முதலான ஐங்ஙாய பஞ்சாட்சரத்தை, குரு பெருமான் மனுவுக்கு உணர்த்தி, தன்னகரம் கைக்கொண்டு சொந்த வீட்டில் குடியேற்றும் செயலே வீடு பேறாகும். ஆதியந்தமும் கடந்து னின்ற குருநாயகமான சாலை ஆண்டவர்கள் அன்னவராம் மன்னவர் பாரமார்த்திக ஞானசைதன்ய நிலைகளை மக்களுக்கு உணர்த்தி ஞானவான்களாக ஆக்கும் திருப்பணியை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கிச் செயலாகச் செய்து வரும் அவையாக ஆதி மார்க்க னீதி அவை உள்ளது என குருபிரான் அருளி, தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**09-04-2023 ~ நாயகன் இல்லம் ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிறப்பு சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. விஜயசித்ரா**

**குருபிரான் அருளமுதம்:**
பௌர்ணமி முதல் ஐந்தாவது நாளான சங்கடஹர சதுர்த்தி வரையிலும், அகமியத்தில் பௌர்ணமியாக காலச் சக்கரத்தின் இரகசியமாக உள்ளது. இயேசு பிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் திருநாளையும், அவரின் பிறந்த நாளையும் உலகில் கொண்டாடுவதன் உட்பொருள் ரகசியம் அறிந்தவனே உண்மையான கிறிஸ்துவன்.

*ஜீவசகோதரர் மணிவண்ணன்:* இயேசு பெருமான் ஜெருசலேம் நகருள் மரபுப்படி கோவேறு கழுதை மீதேறி வெற்றியுடன் நுழைந்த நிகழ்ச்சியே குருத்தோலை திருவிழா. இந்நிகழ்வே, தன்னை சிலுவையில் அறைவதற்கான காரணம் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.



Copyright © AMNA Trust, Chennai                                                                 May 2023

சிலுவையில் அறைந்த பின் மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழும் நிகழ்வை ***நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்*** என்கிறது யோவான் சுவிசேஷம். ஜீவனாகிய இயேசு சாவின் மீது வெற்றி கொண்டு விண்ணேற்றம் எனும் வானலோகம் சென்றார். நினைவுக் கல்லறைகளில் இருக்கிற யாவரும் பரலோகம் செல்வது என்பது, நரனாய் பிறந்த மக்களை மனுவாக்கிப் பின் தேவனாக்கும் மறுபிறப்பைக் குறிப்பதாகும்.

**துரிய மலை மேலுளதோர் ஜோதி வள நாடு**
**தோன்றுமதில் ஐயர் நடஞ் செய்யு மணி வீடு**
**தெரியுமது கண்டவர்கள் காணிலுயி ரோடு**
**செத்தவரெழுவாரென்றுகைத் தாளம் போடு** **(வள்ளலார்)**

உயிரோடு செத்தவர் எழுவார் என்பது இறந்த நிலையிலுள்ள அறிவெனும் ஆன்மா உயிர்ப்படைவதாம். **மாண்ட மனுவனைத்தும் மண்ணிலிருந்து எழுப்பி** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். **உயிரை அறியார்க்கு உயிரினைக் காட்டும் உலக மெய்க்குருபரனின்** ஆசீர்பாதம் பெற்று மறுபிறப்பு என்னும் நித்தியத்தில் உயிர்த்தெழும் மக்களே னிஜமான கிறிஸ்துவ மக்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* மூன்றாம் நாள் உயிர்த்தெழுதல் என்பது அஃகெனும் மூன்றாவது கண் திறக்கப் பெறும் ரகசியத்தைக் குறிப்பதாக உள்ளது.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:*
**மண்:** பல கோடி கேலக்ஸி சேர்ந்த கிளஸ்டர் எனும் ஆகாய வெளியில் மற்றெந்த கிரகங்களுக்கும் இல்லாத சிறப்பு, இவ்வான்வெளி விந்தை ரகசியங்கள் யாவும் அறியவல்ல மனுவைச் சுமந்து கொண்டிருக்கும் பூமியிலிருக்கும் மண்ணுக்கே உரித்தானது.

**மனு:** பூமியிலுள்ள 84 லட்சம் ஜீவ பேதங்களும், தன்னுள் இருக்கும் இறைவனை அறிய முடியாது. மனு ஒருவனே தன்னுள் இருக்கும் இறைவனை விளங்கி அறியும் வல்லபமுள்ள உன்னதமானவன்.

**மொழி:** செம்மொழிகள் கிரேக்கம், லத்தீன், ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ், சீனம் இவற்றுள் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழியே. அம்மொழியே நம் ஜீவனை அறிய வைக்கும், ஒரு மொழியாம் குரு மொழியாக நமக்கு வாய்த்ததே மாபெரும் சிறப்பு.

**ஞானம்:** குழந்தை கண்டு சிரிக்கும் விளையாட்டுப் பொருளை, ஒரு கிழவன் கண்டு சிரிக்காத காரணம், அவனிடம் இல்லாத நிர்க்குணமே. முக்குணத்தால் முதலும் முடிவும் அறிய இயலாத நம்மையும் நடுவறியும் நிர்க்குணத்தில் ஆக்கும் ஞானத்தின் வடிவாகிய குருவே நாம் பெற்ற பரிசு. தன் குருநாதர் அரிஸ்டாட்டில் இருக்கும்போதே தன் மகன் அலெக்சாண்டர் பிறந்ததற்கு மன்னர் பிலிப்ஸ் மக்களுக்கு இனிப்பு வழங்கியது குருவின் மகிமையை உணர்த்தவே. மனம் ஒன்றாமல் பலவித நினைவுகளால் விகாரப்படுவது தியானம் அல்ல. ஒன்றி ஒரு மனமாக ஓதும் முறையை இன்று செயலாக ஆக்கி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவை.

**குருபிரான் அருளமுதம்:** உயிர்த்தெழுதலும் மண், மொழி, மனு, ஞானம் இவற்றின் ரகசியங்கள் யாவும் மனிதனின் சுத்தத்துறை இருதயத்துள் இருப்பதை 64 கலைகளுக்கும் மேம்பட்ட ஒரு கலையின் இரகசியத்தை அறிந்தவர்களிடம் அறிவது மிகவும் சுலபம். ஏதுமிலாத பரவெளியில் ஒடுங்கும் உன்னத நிலையே உயிர்த்தெழுதல் என்னும் அருள் வர்ஷிப்பைத் தொடர்ந்து அங்கத்தினர் சேர்க்கையுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*அஞ்ஞானமென்னும் பாம்பினால் விழுங்கப் பட்டவர்கள் ஜீவர்கள். அவர்களுக்குச் சிகிச்சை செய்பவரே வித்தியா சொரூபராகிய பகவானாவார். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**13-04-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**சுத்த சைதன்யச் சுகந்நவான் கடலே...** எனும் குருமணிமாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** திருப்பாற் கடலில் உள்ள நன்மை அளிக்கும் சுகந்த வான்கடலே சுத்த சைதன்யம். பஞ்சபூதங்களின் இருப்பிடமான ஐம்புலன் வாயிலாக மனமானது உணர்வெனும் கயிற்றால் இத்தேகத்தை இயக்குகிறது. மனதிடம் அடிமைப்பட்டு கிடக்கும் **நான்** எனும் பேரறிவு அதிலிருந்து வென்று வெளி வர, மெய்வழி ஆண்டவர்கள் **வெல்லடா மும்மலத்தை வெல்லு வெல்லு வெல்லாத மூடருக்கு விள்ளா தெட்டே** என அருள்கிறார்கள்.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 108:** நமக்குள் **நான், நான்** என கூறிக் கொண்டிருக்கும் வஸ்து **நாம்** ஆகிக் கொள்வதுவே ஞானம். வந்த வேதமாகிய குருவுருவுடன் காலமெல்லாம் ஒட்டிப் பழகியே இது கைவரவாகும். இதனையே **தன்னை அறிந்தது உன்னை ஐயா** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். கடலின் ஆழத்தை அளக்கச் செல்லும் உப்புப்பதுமை கடலினுள் இரண்டற கலப்பது போல் நமக்குள் சிவனாக, ஜீவனாக கலந்து இருக்கும் **நான்** என்பதை பெரியோர்களின் திருவாக்கின் மூலம் அறிவதே தன்னை அறிதல்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **வாடி னெஞ்சுடைந்து வகையொன்று மிலதாய்... (ஞான அகவல்)** அநியாய மரணத்தை வெல்ல, 12 போலி குருமார்களிடம் முரீது பெற்றும் வான் பொருளறியாது, ஓயாத சிந்தை ஒழியாது கலங்கியதையும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** இறைவன் மனிதனுக்கு வகுத்த கடமையில் இருந்து தவறியவர்களுக்கு செய்யும் பித்ரு பூஜை, இதன் பின்னர் ஓர் வாழ்வு உண்டு என்பதை வாழும் மக்களுக்கு உணர்த்தவே செய்யப்படுகிறது. பகைவர்க்கும் அருளும் பெரியோரின் இரக்கமே இம் மெய்ப்பாதையில் நம்மை தொடரச் செய்கிறது.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

> **வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
> **தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.** **(திருக்கொரல் எண் 11)**

மழை நீர் தவறாது பெய்து உலகம் செழிப்பதைக் கூறுவதல்ல இக்கொரல். வான் நின்று என்பது, அசையா நிலையிலுள்ள வான் மூலம் மெய் உலகமான திருவடியையும், ஆசானின் அருளான மெய் உணர்வுக்குரிய அமிர்தத்தையும் அறிந்து காலனற்ற இறைநிலையை அடையலாம் என்பதேயாகும்.

**குருபிரான் அருளமுதம் :** ஈர்ப்பு விசை கொண்ட பூமியை சமஷ்டி பேதமாகவும், ஈர்ப்பற்ற ஆகாயத்தை வியஷ்டி பேதமாகவும் இறைவன் படைத்துள்ளான். அசைவற்ற பரம்பொருளை கைக்கொள்ளும் தகுதியை மனு ஒருவனுக்கே இறைவன் தந்துள்ளான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 11**

> **மாமன் மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்**
> **காமன் கணையெனக்கு கனலாக வேகுதடி ...**

மெய்வழி ஆண்டவர்கள் அருளியது போல் பத்து வயதான கன்னித் தாயை மாமன் மகளாக, மச்சினிச்சி என சித்தர் பாடுகிறார். பேரறிவாக வரும் தாயான குருபிரானின் தயவால் பிரகாச பொருளான **நான்** எனும் ஜீவனின் ரகசியம் அறிந்து ஜென்ம சாபல்யம் அடையலாம்.



Copyright © AMNA Trust, Chennai 



**குருபிரான் அருளமுதம்:** மனம் கவரும் பாடல்கள் மூலம் மெய்ஞானிகள் ஞான நிலைகளை அருள்கிறார்கள். மனம் எனும் சூரியபகவான் 12 ராசிகள் மூலம் பிராணனாக ஒவ்வொருவரிடத்திலும் இயங்கும் அறிவிருக்கும் தலமே சித்திரை முதல் நாளாகிய தமிழ்ப்புத்தாண்டு. சர்வ உலக மக்களும் கொண்டாடும் புத்தாண்டு என்பதின் ரகசியம் இதுவே ஆகும்.

**அமுத கலைக் ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

முருகப் பெருமானாக வந்த மெய்வழி ஆண்டவர்கள் முன்னிலையில் தேர்ச்சி பெற்றவரே திருவள்ளுவ நாயனார். பரிசாக வரும் குருவின் அருளன்றி மறைகளின் தரிசனை கிட்டாது. இறை திருவடி சேர்வதனை அருளும் 1330 திருக்கொரல் அறிவிக்கும் திருமொழிகளை செவியில் சுவையாக உணராதவன் ஐந்தறிவு மிருகமே. வள்ளல் பெருமானும் **கேட்டுத் திருந்தி உடனெழும் திறத்தில் ஒருவரேனும் தேறிலர்** என அருள்கிறார். பேசொணாப் புகழுடம்பிற்கு ஆகாரமாக இருக்கும் அருள் எனும் யுகாந்தநாட்டு செல்வத்தை அருளும் மாசற்ற ஆலவாய்க்கு செவிமடுத்தால் நமது மாயா வீட்டின் செயல் அறிந்து அறிவாகாரம் பெறலாம் என குருபிரான் அருளிய பின் தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**20-04-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பூர்ணிமா ஜீவானந்தம்**

**அண்டமும் அதிபா தாளம் அகிலமோ டமரர் மற்றும்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நபிகள் நாயகம் அவர்களுக்கு தெய்வீக ரகசியங்கள் இறைவன் அருளால் ஜிப்ரேல் மூலமாக கி.பி 610 ஆம் ஆண்டு அவரது 40 வயது முதல் இறுதி வரை லைலத்துல் கதிர் என்னும் இரவில் சிறிது சிறிதாக அரபு மொழியில் அருளப்பெற்றதே திருக்குர்ஆன். இது மக்களை சீர்திருத்த அருளப்பெற்ற உலகப் பொதுமறைகளில் ஒன்றாகும். அறிவு இருக்கும் தலம் அறிந்த மக்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் வரும் மூன்றாம் பிறையே ரமலான் நாள். மனிதனைத் தவிர இயற்கையுடன் ஒன்றி வாழும் மற்ற ஜீவபேதங்கள் காலச் சக்கரத்தின் மாற்றத்தை நன்கு அறிந்துள்ளன. அறிவில் தெளிவுடன் இருக்கும் மெய் உணர்வையே மனிதனுக்கு திருக்குர்ஆன் உணர்த்துகிறது.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 109:** நித்திய வாழ்விற்கான அறிவு மாணிக்கத்தைப் பெற்று வந்த மனிதனின் அறிவு பிரகாசிக்கும் எல்லை இவ்வுலகில் சாலை ஒன்றுதான் என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அழிதுயர் மரணத்தின் நிலைவரை சென்று உணர்ந்தே புத்தபகவானும், சாலை ஆண்டவர்களும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துள்ளனர். அழிவை நோக்கியே செல்லும் மனதை அறிவாக மாற்றும் செயலே பிருக்த யோகம். அவன்-அவள்-அது எனும் வேதப் பொருளை தனது நேசமாக ஆக்கியோரின் நேசம் நமக்கு கிட்டுவதே பெரும் பாக்கியம்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **சொன்ன திக்கீரைத் தொழுகையின் பின்னே... (ஞான அகவல்)** போலி குருமார்கள் பணத்திற்காக தங்களது அறியாமையை ஞானமாக போதித்ததை அறியாமல், மெய்யான திக்கீர் என்னும் வணக்க முறையை அறியும் அதீத ஆவலால் தன்னிடம் இருக்கும் பொன், பொருள் யாவும் அதற்காக ஆண்டவர்கள் செலவிட்டார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை** **(திருக்கொரல் எண் 12)**

துப்பு எனும் உளவு கொண்டு அகமிய ரகசியம் அறிந்து, ஆய்ந்து தோய்ந்து வருபவர்களே துப்பார். சிவன் ரா, வைகுண்ட ஏகாதசி, லைலத்துல் கதிர், எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம் என்ற கங்குல் பகலற்ற இடமான ரகசியத்தை மனுக்குலம் செழிக்க வான்மழை போல் அருள்பவர்களே மெய்க்குருபிரான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் 12**

**அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை யம்பாக்கி
மந்திரத்தே ரேறியல்லோ மான்வேட்டை யாடுதற்குச்...**

மனதை அறிவாக மாற்றும் செயலானது ஓசை கொண்ட நடனமெனும் கூரிய வில்-அம்பு என அருள்கிறார்கள். பஞ்சாட்சரம் எனும் அறிவின் துணையுடன் அகமிய உலகில் உதயப் பொருளாக விளங்கும் சந்திர, சூரியனின் மந்திரத் தேரில் ஏறி, மாய மனதை குருபெருமான் துணையுடன் வெல்லலாம்.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலை ஞானபோதம் - இரண்டாம் காண்டம்:**
நம் செவியில் சுவை உணர்த்த வெகுமதி சுமை சுமந்து வரும் குருபெருமான், செத்துக் கொண்டே இருக்கும் நம்மை இனி சாகாதிருக்க அருள் புரிகிறார்கள். பரிசாக வரும் குருபிரானின் எண்ணம், சொல், செயலுக்கு இணங்கிட நம் மனம் செம்மையாகிறது. சிப்பிக்குள் விழுந்த மழைத்துளியானது முத்தாக விளைவது போல, ஆசானின் அருளமுத கொண்டல் மழைத் துளியானது நம்மிடத்தில் விளைந்து வீடுபேறடைய துணை செய்கிறது என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 22-04-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**வந்த வேதம் வரைந்த பயத்தினால் ...** என்ற ஞான அகவல் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
**ரமலான் மாத சிறப்பு :** னபிகள் னாயகம் உலகிற்கு அருட்கொடையாக **அல் - குரான் வேதம்** அருளிய மாதமே ரமலான். னபி பெருமான் வெவ்வேறு காலத்திலும் குரான் அருளியதால் ஒவ்வொரு வருடமும் ரமலான் பண்டிகை வெவ்வேறு மாதத்தில் வருகிறது. காலச் சக்கரத்தின் இரகசியம் கொண்ட வழிபாட்டு முறையில் எல்லா மாதமும் நோன்பு அனுசரிப்பது அல்லாவுடைய கயிற்றால் கட்டப்பெற்ற வேதத்தின் சூராவை ஓதி வணங்குவதற்கே.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் வாக்கியம் எண் 126 :** ஜென்ம சாபல்யமெனும் முத்தியை அளப்பதற்காக தெய்வத்திருமேனி தாங்கி வரும் குரு கொண்டலை தரிசிக்கும் போது னம் உளம் கலங்கி கண்ணீர் கதகதவென கொட்ட மந்திரத்தை உரக்க சொல்ல வேண்டும் என்பதே தெய்வ உத்தரவாகும்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **தனமே குருவாய்ச் சார்ந்தவ ரெவரும்... (ஞான அகவல்)** சாலை ஆண்டவர்கள் மெய்ஞானம் பெறுவதற்காக போலி குருமார்களிடம் சிக்கி பலனேதும் கிட்டாத வேளையில், தூய ஞான சுடர் விளக்காக வந்து ஆட்கொண்ட குரு கொண்டல் தனிகை மணி பிரான், சாலை ஆண்டவர்களை அழியாத் திருனாட்டை ஆளச்செய்து மனுக்குலத்தை உய்விக்கும் வாக்கு வல்லபமும் வழங்கினார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம்**
**மத்தேயு 13:35** *என் வாயை உவமைகளால் திறந்து உலகத் தோற்றம் முதல் மறை பொருளையும் வெளிப்படுத்துவேன்* பெரியோர்கள் சீதக் களப செந்தாமரை பூம்பாதம் மூலம் வேதமா மறைகளின் கெட்டிப் பூட்டை எட்டித் திறந்து தன்னுலகத் தோற்றத்தின் உள்ளமை ரகசியத்தை உவமைகளின் மூலம் உணர்த்துகிறார்கள்.

**மத்தேயு 16:19** *பரலோகத்தின் திறவுகோல்களை னான் உனக்கு தருவேன். பூலோகத்தில் னீ கட்டுகிறது பரலோகத்திலும் கட்டப் பட்டிருக்கும். பூலோகத்தில் கட்டவிழ்ப்பது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்றார்.* **எந்நிரத்தின் பூட்டுடைய ஏவும் குருனாதர் அந்நரத்தில் சாவி வைத்ததாம்**. இக பர சம்பன்னராய் வரும் சற்குருபிரானின் அருளால் அவரவருள் கட்டுண்டிருந்த மெய்ப்பொருள் அவிழ்க்கப் பெற்று தாயாதி சொத்தானது பூலோகத்திலும் பரலோகத்திலும் அருளப்பெறுகிறது.

**மார்க் 12:18** *உயிர்த்தெழுதல் இல்லை என சாதிக்கின்ற சதுசேயர்களிடம் இயேசு பிரதியுத்தரமாக, நீங்கள் வேத வாக்கியங்களையும் தேவனுடைய வல்லபத்தையும் அறியாததால் அல்லவா தப்பான எண்ணங்களை கொண்டிருக்கிறீர்கள்.* உயிர்தெழுதல் என்பது தேவன் அருளால் அனுதினமும் அறியாமையால் செத்து கொண்டே இருக்கும் மக்களின் அறிவுக்கண்ணை திறப்பித்து மறுபிறப்பு பூமியில் எழுப்பும் ரகசியமாகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத் :* **ஸ்ரீமத் பகவத்கீதை - கர்ம யோகம்**
கர்மத்தை விட ஞானம் சிறந்ததெனில், தன்னை ஏன் கர்மத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் என அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கேட்க, **கருப்பை கூடிக் கலந்த வினைத்தொடர்** எனும் கர்மாவை ஞானமெனும் தத்விசாரம் மூலமே அறுத்தெறிய முடியும். சாஸ்திரங்களால் விதிகளின் படி மனதில் பற்றற்று புலன்களை வென்று பரமாத்மாவை அடையலாம். ஆகையால், அர்ஜுனா! பற்றின்றி யாகத்தின் பொருட்டு கடமையை நன்கு ஆற்றுவாயாக! ஆண்டவர்கள் அருளிய எழுதாத எழுத்தை குருவருளால் ஓதிடும் வழியறிந்தோர் வேள்வியில் னிலை பெற்றிருக்கும் பரமாத்மாவுடன் இரண்டற கலந்து கர்மயோகத்தின் பலனை அடைகின்றனர்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம் :**
ஆதி பரம்பொருள் சாலை ஆண்டவர்கள் தன் தேவத் திருக்கரத்தால் 1946, 1947, 1948 ஆண்டுகளில், அகமியத்தில் அழியா வஸ்துவின் அகமிய செயலை தேடி கூடி அடைவதற்கான தேவ ரகசியத்தை, னாடகத் தமிழாக அருளியதே தெய்வத் தேடு கூடகம்.
பிரம்ம கூடகர்கள், ஆதி மனுமகனைத் தேடி தென்திசை னோக்கி தெய்வீக ஊர்த்துவ வாடை வீசும் வழியில் செல்கையில், பொய் வேடதாரிகளை சந்தித்த நிகழ்வை தங்களுக்குள் பரிமாறிக் கொண்டு, னெற்றி கண்ணோடு வந்தவரை தேடிச் செல்கின்றனர். குரவர் குலந்தனில் பிறந்த குரமாதுவை தரிசித்து மலை னில குலச் சம்பிரதாய வளங்களை கேட்டறிந்து, கல்க்கியாகிய மகதி ஞானமாலியவர்கள் இருக்கும் திருமாளிகை, ஆசன அலங்கார பீடம் பற்றி வினவுகின்றனர். அப்போது குரமாது குபீரென மறைகிறார். இது கபடனாடகரின் செயல் என எண்ணி, தேடு கூடகம் னோக்கி சென்று கோகுலர்களாகிய மாடு மேய்ப்பவரை சந்தித்து ஆலகால விஷம் உண்டோரைக் கண்டது உண்டோ என கேட்டு, பின்னர் காஷாயக் கொடி அடையாளம் கண்டு சத்திய னகரத்திற்குள் னுழையும் முன் துவாரபாலர்களை சந்தித்து அனுமதி பெற்றனர்.
தேடி வரும் பரம்பொருளை னாடி பஜனையர்களுடன் சேர்ந்து பாடிக்கொண்டே சென்று, முமூச்சுமார்களையும் அடைந்தார்கள். பிறகு கலை வல்லார்களிடம் மயில் வாகன சீட்டு பெற்று இளனீர் அருந்தி பிரம்மகூடகர்கள் களைப்பாறினர். தொடர்ந்து ஒன்பது வகையான மந்திரிமார்களை கண்ணுற்று, அதன் பின் அனந்தாதி தேவர்களுடன் அளவளாவி ஆமனு ஈசனே வந்து அருளமுதம் அளித்த அரும் பெரும் னிலைகளை அறிந்து அடைந்தனர்.

*ஜகத்திற்கு ஹேதுவாகியும், ஸம்ஸார சமுத்திரத்துக்குச் சேதுவா (அணையா) கியும், சகல வித்தைகளுக்கும் பிறப்பிடமாயு முள்ள சம்புவான குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai    May 2023

**பூமிய டங்ஙலுக்கும் ஓதும்பு**
**ராதனங் நூறுவது**
**தெய்வீக மெய்வழியின் - தேடிடுங் நூடகமே**
**ஆ - மனு ஈசன்வந்து தேவர்க்க**
**ருளமு தம்தந்நது**

தெய்வத் தேடுகூடகத்தின் சிறப்பு அம்சத்தை இரத்தின சுருக்கமாக அருளிச் செய்து ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**23-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

*ஜீவசகோதரி சுமதி:* பிறந்த குழந்தையிடம் இல்லாத மனம், வளரும் போது எண்ணத்தின் சேர்க்கையால் உருவாகி பின்னர், உள் நினைவாகிய அறிவிலிருந்து வெளி நினைவாக, ராகு - நல்ல மனம், கேது - கெட்ட மனம் என வருகிறது. மனமானது புத்தி, சித்தத்துடன் சேர்ந்து நான் எனும் அகங்காரமாக வெளிப்படுகிறது. அவாவுடன் தாவும் ஜீவனுக்கே சர்வ சங்கையாகிய மனம் எனப் பெயர். பரமாத்மாவை சாரும் வரை மனதின் ஆசை அடங்குவதில்லை. மனதின் சங்கல்பமே உடலின் இயக்கம். எண்ணங்களற்ற மனமே முக்திக்கு வழி. மூச்சு லயமாகிய மனோலயமே அறிவை பிரகாசிக்க செய்யும். ஜீவனின் கண்ணாடியாகிய மனமே அறிவு வளர்ச்சிக்கு துணையாக உள்ளது. ஒரு தெய்வ ஆசானின் அருளால் மனதை பின் வைத்தும், அறிவை முன்வைத்தும் நடப்பதே முக்திக்கு வழி. மனதால் நுகரும் யாவும் சிற்றின்பமே. ஆசான் அருளால் மனக்கண் திறந்து மனம் சைதன்யமாக மாறும்போது அதுவே பிரம்மமாகிறது.

*ஜீவசகோதரி சருபா:* **விண்ணுமண்ணும்... மௌனகுரு காப்பே (மெய்வழி னூல்)** இப்பாடலில் உள்ள உலகின் உற்பனம் யாவும் மனுவுக்காகவும் மனுவைப் படைத்தது தன்னை அறியவும்தான். ஆண்டவர்கள் அருளிய பாவ புண்ணிய நிலையையே, **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருளில் உய்த்து விடும்** என்கிறார் வள்ளுவர். உலக படைப்பு அனைத்தும் மனுவுக்குள் சுருட்டி மடக்கி திரட்டி தோற்றமில்லாமை எனும் வடிவமாக உள்ளது. இறைவனை அடைவதற்காக மனிதன் ஒருவனுக்கே தனிச் சீதனமாக மனம் எனும் ஆறாவது அறிவு இறைவனால் தரப் பெற்றுள்ளது. மரணத்தை வெல்லும் நுண்ணிய அறிவு மனிதனிடத்தில் இருந்தாலும் அதை பிரகாசிக்கச் செய்யும், எமனை அதிகாரம் பண்ணும் ஒரு பேராண்மை அதிகாரண வல்லப ரூபத் திருமேனியரை தேடியடைவதுவே மனுவின் முதற் கடமையாகிறது. அவரே அவரவரின் இருதயத்துள் விளங்கும் இறைவனை காட்ட வல்லவர்.

**குருபிரான் அருளமுதம்:**

மனிதனிடத்தில் அறிவு வடிவாக இறைவன் இருக்கின்றான். அறிவு மனமாக மாறும் போது கீழ்நோக்கமாக நரகத்திற்கு செல்கிறான். இதனை மெய்வழி சாலை ஆண்டவர்கள் **மெய்வழி குருமார் சொல் மேல்னோக்கம் பொய்வழி குருபோதம் கீழ்நோக்கம்** என அருளியுள்ளார்கள். பொய், மெய் தெரியாத உலகில் வாழும் மனிதன், னித்திய அவஸ்தை எனும் மரணத்தை வெல்ல ஒரு மெய்குருவின் இரக்கத்தால் பிரம்மவித்தை செயல் அறிந்து செத்து தினம் பழக வேண்டும். இதற்கான தேவை ஒருவனது முயற்சியும், வைராக்கிய சித்தமுமே.

*ஜீவசகோதரி செஜிதா:*

**சேதமே தவமென் றலைந்நலைந் திட்டவெனை தெருவாடு மதளைபோல**
**சேர்த்தெங்களைக்கூட்டி விளையாட்டுப் போலவே செய்த னிஜ மானவுளவா**
**மாதவா... மாதவா வாடாத தவவாய்மை மகரிஷி மார்க்கனன் னாதவள்ளால்**
**வரதுகுரு வேனினது சரணகதி யானகுலம் வருபிறவி யறவொழியுமே**
**(மெய்வழி கலைமகா அனந்தர்)**



Copyright © AMNA Trust, Chennai

அறிவே அற்றம் காக்கும் கருவியாக, அழியாமை எனும் நன்மைக்கு நம்மை இட்டுச் செல்லும் செயலாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* குரு வேறு சிவன் வேறு அல்ல. பஞ்சாட்சரமாகிய ஐந்தெழுத்தில் **சி** என்பது தன் மயமாக்கும் நெருப்பின் அம்சம். அதேபோல் மெய்குருபிரான் தன்னை சார்ந்தவர்களை தன் மயமாக்கி மனமாகிய குருவை அறிவு நிலைக்கு பெயரச்செய்யும் செயலே குரு பெயர்ச்சி. குரு பார்க்க கோடி நன்மை. குருவின் பார்வையால் கோள்களின் தோஷங்கள் அற்றுப் போகின்றன. **குருவே சிவமெனக் கூறினன் நந்தி (திருமூலர்) சிவன் பாதம் நினைப்போரை மேவு நினையாரை நீங்கி இந்நெறியில் நின்றால் உனைப்போல் ஒருவருண்டோ மனமே எனக்கு உற்றவரே (பட்டினத்தார்)**. **குருவே பாதம் பாதமே குரு** என்பதனை ஆதிமார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கு செயலாக ஆக்கியும், ஆக்கிக் கொண்டும், ஆக்கவும் செய்கின்ற குருவின் பாதம் பணிவோம். தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**23-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவசகோதரர் கௌதம் :* **குருபெயர்ச்சி:** அவரவருள் இருக்கும் அஞ்ஞான இருளை தகர்த்தெறிந்து மெய்ஞ்ஞான வித்தை ஊணி நித்திய சுயம் பிரகாசத்தை ஒளிரச் செய்பவரே குருபகவான். நம் பொய் மனதை மெய்யறிவாக மாற்றி நித்திய பரிபூரணத்தில் குருபெருமான் ஆக்கி வைக்கும் செயலே குருபெயர்ச்சி. மனுவானவனின் மனதிற்கு அடிமையாக இருக்கும் பேரறிவை குருபிரான் தன் நாத வல்லபத்தால் மீட்கிறார்கள். கடல் அலை போல் மானிட வாழ்வு தோன்றுவதும் மறைவதுமாக உள்ளது. பொய்யின்ப உணர்ச்சியில் வாழும் ஒருவனை மெய் மகத்துக்கள் மெய் உணர்வுக்கு மாற்றுகிறார்கள். அழியும் பொய் உடலினுள் இருக்கும் அழியாத நடுப்பொருளை மெய்ஆசான் வேத சாட்சியாக அதற்கான அறிவைத் தந்து அறிய வைக்கிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள்,

**மெய்பொய்யும் பிரித்துக் காட்டும்**
**வேதமே தூல மாகும்**
**பொய்யுட லுயிர்மெய் யைனீ**
**பெற்றிட வேண்டு மானால்**
**மெய்யிரு தயமாம் கல்பை**
**விளங்கிடத் தலமெய் யாகும்**
**பொய்யிட மனைத்தும் பித்து**
**ஈரலங் கெமனு மாமே** என அருளியுள்ளார்கள்.

நரனாக இருக்கும் ஒருவனை மனுவாக்கி, தேவனாக ஆக்கும் செயல் மெய் குருபிரானின் கையகத்தில் உள்ளது.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* பாலைவனத்தில் சிக்கி பரிதவிக்கும் அடிமையை மீட்டு களைப்பகற்றி பரவசத்தில் ஆழ்த்துவது போல், பிறவி சுழலில் சிக்கிய ஒருவனை மெய் பாரவான்கள் தங்கள் அருள் அமுதத்தால் மீட்டு களைப்பகற்றி பிறவாமையில் ஆக்குகிறார்கள். இதுவே இன்று ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக உள்ளது. ஒளி உள்ளவரைதான் நிழல் இருக்கும். மனிதனை பிரகாசிக்க செய்கின்ற மெய்யான ஒளியாகிய ஆன்மாவுடன் இரண்டறக் கலந்து என்றென்றும் நிழலானது பிரியாது இருப்பதையே, சாலை ஆண்டவர்கள் நிழல் போலும் பிரியாதெனை ஆண்டவென் தலையில் என் குரு தாள் வாழி வாழியே என அருளியுள்ளார்கள். ஆண்டவர்கள் அருளிய **ஜீவனென்னும் சிரஞ்ஜீவிக்கு செப்பும் உபதேசம்** என்பதே பேரறிவு கொண்டு வாழும் மரணமிலாப் பெருவாழ்வு என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai May 2023

**27-04-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

**வஞ்ஞுமில்புலி யுடைதரித் தேவன...** எனும் பூரண வண்ணப்பா பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:**
வஞ்சகமான நம் மனதினால் தேகமெனும் மாமிச இச்சையாலும், இந்நில மாய்கை இடைஞ்சலின் வெட்கத்தாலும், நேமமாய் சாம் வழி போக இருந்த நம்மை தடுத்து, நித்திய பொருளின் பூரண வண்ணத்தில் ஆழ்த்தி, அறிவு வடிவாய் மாற்றும் குரு பெருமானின் வாக்கு முற்றாதது. அஷ்டாங்க யோகத்தின் ஏழாவது நிலையாகிய தியானத்தை, அதற்கு முன்னிருக்கும் ஆறு நிலைகளை அறிந்த பின்பே அறிய முடியும். ஆறாவது அறிவாகிய மனம், புறத்தில் அலைவதை மாற்றி, தன்னை அறிவதையே **மனம் திரும்புங்கள்** என பைபிளிலும் மனக்கவலை மாற்றும் உளவாக திருக்கொரலிலும் கூறப் பெற்றுள்ளது. அவரவரின் ஜீவாதார ஆட்டத்தை அறிவிக்கும் நாமத்துக்குரிய பொருளை அறிவதே தன்னை அறிதல். தோற்றத்தில் இருக்கும் அழியும் அனித்திய பொருளை விட்டு, தோற்றமில்லாத னித்திய அழியாப் பொருளை அறிவதற்கே ஆறாவது அறிவு மனிதனுக்கு தரப் பெற்றுள்ளது.



**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 110:** புசுண்டர் பிரான் அருளிய செய்யுளில் வரும் சீர்களில் துரியாதீதம் எனும் சங்கல்பமாகிய மனோனிச்சயம், பிருக்த யோகத்திற்கான முதற் காப்பாகும் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

துரிய, துரியாதீத நிலையாகிய பேருறக்கம், உயிர்ப் படங்கலெனும் உயர் நிலையை செயலாக்கும் வித்தையே பிரம்மவித்தை. இதனை மக்களிடத்தில் செயலாக்கி மரணமிலாப் பெருவாழ்வில் ஏற்றி வைக்கும் மார்க்கமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி லாவண்யா:* **னாயக மென்றார் னடுனிலை யறியார்... (ஞான அகவல்)** நாயகம், தாயகம், உஜூது, ஜீவ நுண்ணிலை, பாதியில் பாதி, கல்பு, சரகு, இல்மு, முழுக்கழுக்கு இவற்றின் உண்மை நிலை அறியாத போலிகள் தங்களை குருவின் சீடர்கள் என்றும் ஞானிகள் என்றும் கூறித் திரிகின்றனர்.

**குருபெருமான் அருளமுதம்:**
நம்மிடத்தில் நடுநிலையாக, தனிநிலையாக இருக்கும் உஜுது எனும் உயிரின் நிலையையும், பாதியில் பாதியான அறிவு மற்றும் ஜீவ நுண்ணிலை என்னும் காலத்தின் ரகசியத்தையும், கல்பின் இருப்பிடத்தையும் மரண பயத்தைப் போக்கும் சாகாக்கல்வியை கற்பிக்கும் அறிவே பேரறிவு. மற்றவை அனைத்தும் அறியாமையே.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி.** **(திருக்கொரல் எண் 13)**

அழியாத நித்தியத்தை பற்றி அறிவிப்பதே 1330 திருக்கொரலும், அழியாத அறிவைத் தரும் பெரியோர்களின் வாய்மையே வான்கொடையாகும். ஐந்தறிவு ஜீவ பேதங்கள் கடந்து



Copyright © AMNA Trust, Chennai 

ஜீவனைக் கண்டு ஜென்மசாபல்யம் அடையக் கூடிய தகுதி உடைய மனிதனையே உயர் திணையாகிய உயிர் என்பர்.

**குருபெருமான் அருளமுதம்:** அறம், பொருள், இன்பம், வீடு எனும் திருக்கொரலின் அடி நாதத்தை அருளும் ஆசானின் அமுதவர்ஷிப்பே வான் மழை.

ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:
**எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தி என்**
**அல்லலை நீக்கிய அருட் பெருஞ்ஜோதி** **(அருட்பெருஞ்ஜோதி அகவல்)**

எல்லையிலாப் பிறப்பெனும் இருள் சூழ்ந்த பிறவிக் கடலின் அல்லலாகிய பிறவிப் பிணியை மாற்றும் வல்லமை கொண்டதே அருட்பெருஞ்ஜோதி.

**குருபெருமான் அருளமுதம்:** இனி சாகாதிருக்கும் உளவாக இரவு பகலற்ற எல்லையில் ஒடுங்குவதையே வள்ளல்பிரான் **ஏதுமிலா பரநாத எல்லை** என்கிறார்கள். **எல்லை திசையற்ற ஓர் இடமும் உண்டு நீ அறம் செய் வீடாம் ஜீவன்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவன் திருவடி சேர்ந்திட குருவின் நாத தொனியே அருந்துணை என்பதனை, **பிறப்பெனும் பேதமை நீங்க சிறப்பெனும் செம்பொருள் காண்பது அறிவு** என்கிறார் வள்ளுவர் என ஆசான் அருளியதைத் தொடர்ந்து, தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

### 29-04-2023 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்

*ஜீவசகோதரர் கௌதம்:* மனிதனிடத்தில் ஒரு தலைமுறை காலம் குடியிருந்து காத்து இரட்சித்து வரும் வஸ்து வித்தாகிய அமானிதப் பொருளை இதயாசனத்தில் தரிசனையாக காட்டித் தந்து னித்திய பேரின்ப மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றி வைப்பவர்களே மெய் குருபிரான். அவர்கள் பாடுபட்டு பெற்ற மெய்ஞானத்தை பேரிரக்கம் கொண்டு நமக்கு அருளும் மெய்ச்செயலை, ஞான முறையீடு பாடலில் **பாடுபட்டு கூலி வாங்கத் தெரிந்தவர் பாரில் ஆண் பிள்ளைகளே** என்றும், மெய்வழி னூலில் **பாடுபட்டேன் பலனெடுத்தே னுனக்கும் சொன்னேன்** என்றும் அருளியுள்ளார்கள். பாடுடை பார ரகசியமானது பரம்பரை பரம்பரையாய் பாரவான்களின் கைம் முதலாக இருந்து வருகிறது. அதைப் பெறுகின்ற வகையில் பெற்று கொண்டவர்களே பாக்கியவான்கள்.

*ஜீவசகோதரர் பார்த்தீபன்:* மனுவிற்கு மட்டும் பிரத்யேகமாக தரப்பட்ட ஆறாவது அறிவின் உன்னதத்தை ஆசான் வாய்மையால் அறியலாம். அவர்கள் நம்மிடத்தில் பதித்து வைத்துள்ள பிரணவக் கலையின் கிரண வீச்சே நம்மை அறிவு வடிவாக மாற்றுகிறது. சாகாக் கல்வியை பழகச் செய்து எமபயத்தை கடந்து வாழும் னித்திய அழியாத வாழ்வை வரமாக வழங்கும் வள்ளல் பாதம் பணிவோம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **உழைப்பாளர் தினம்:** உடலுக்குள் 96 வேலையாட்கள் ஓய்வின்றி இயங்கி வருவதையும், இயக்கும் எஜமானனின் செயல் நின்றால் இந்த உடல் சரிந்து விடுவதையும் அறிந்தவர்களே பெரியோர்கள். அவர்கள் தம் உளங்கனிந்து நம்மை சீடனாக ஏற்று சரியை, கிரியை, யோகம், ஞானமெனும் ஒழுக்க னெறிகளின் மூலம் ஆன்மாவின் அகமிய நிலைகளை அறிவித்து நம்மை ஆளும் எஜமானை தரிசிக்க செய்கிறார்கள். பெருமுதலாகிய அமானிதத்தின் மூலம் உழைப்பின் உள்ளமை இரகசியத்தை அறிந்து அடைவதே உழைப்பாளர் தின சிறப்பாகும் என்ற பகிர்தலுடன் அவை நிறைவடைந்தது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**02-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**புல்லும் பூமி உலகுள்ள நாளெல்லாம்...** என்ற குரு ஸ்தோத்திர பாடலைத் தொடர்ந்து, **னஞ்னுண்டன்னா கத்துறை யேசெலு னாதமுங்நூடிய னாகத மோடிய...** மற்றும், **னெஞ்ஞுஞ்ஞாமலெண் ணாயிர மாண்டெனு னிகழ்ந்த பாரது புகழ்ந்த வூரது...** என்ற பூரண வண்ணப்பா பாடல்கள் ராக தாளத்துடன் பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**23-04-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**மௌன வைப்பின் வகை விரித்தே எனை...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலைத் தொடர்ந்து **விஞ்ஞுஞ்ஞும்பல மாமடி மூலம் வீறு கொண்டடி னேரு மேகுடி...** மற்றும் **அஞ்ஞிஒஞ்ஞிட ஒச்சி டும்படி அதட்டி யேயுல குதட்டி டாமலே...** என்ற பூரண வண்ணப்பா பாடல்கள் ராக தாளத்துடன் பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!

*ஸப்தஸாகர பரியந்நமுள்ள தீர்த்தங்ஙளின் ஸ்னானத்தா லுண்டாகும் பயன் யாதோ, அது குருவினது பாதோதகத் துளியின் ஆயிரத்தொரு கூறினால் உண்டாகின்றது.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 2023 ஏப்ரல் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

| | | |
|---|---|---|
| இன்பலதா | தியாகராஜன் | பாலமுருகன். காஞ்சிபுரம் |
| மாதவன் | கிரகதுரை | சுந்தரவடிவேல். சிவகாசி |
| ஸ்ரீமா | பொன்செல்வம் | கார்த்திகேயன். சிவகாசி |
| மகிமா | கௌதம் | மகேஷ். மதுரை |
| ராஜமகேஷ் | புன்னகை | கார்த்திகேயன். ஆவடி |
| வடிவேலன் | சுந்தர் | சீனிவாசன். காஞ்சிபுரம் |
| தனராஜன் | செல்லம்மா | |
| ஜெயபிரகாஷ் | சபிதா | |

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு:*** *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 22 - Month: May 2023*



Copyright © AMNA Trust, Chennai